Vlambaram -June 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-06-14 6:01 PM Page 1

கனடாவின் மூத்த தமிழ் இதழ் | விளம்பரம்™ • VLAMBARAM™ | Canada's Oldest Tamil Newspaper

35ஆவது ஆண்டில்

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

விளம்பரம்

VLAMBARAM

email: vlambaram@sympatico.ca Tel: 416-282-8059 www.vlambaram.com

நதி: 35 பாலம்: 12 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JUNE 15, 2025







# நேட்டோ செலவின இலக்கை இவ்வருடம் எட்டும் கனடா!

"நடப்பு நிதியாண்டின் இறுதி நாளான 2026 மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) இரண்டு சதவீதமாக நிர்ணயிக்கப்பட்ட பாதுகாப்பு செலவினங்களை நேட்டோவிற்கு (NATO) உறுதியளித்த மாதிரி கனடிய மத்திய அரசு மேற்கொள்ளும்" எனக் கனடியப் பிரதமர் மார்க் காணி 2025 ஜுன் 9ஆம் திகதி கூறினார்.

கனடியப் பிரதமர் ரொறொன்ரோவில் உள்ள Fort York ஆயுத களஞ்சியத்தை (Armoury) பார்வையிட்ட பின்னர் வெளியுறவுக் கொள்கை சிந்தனையாளர்கள், தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத்துறை தளபாட வணிக நிறுவனங்களின் தலைவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், "பனிப்போர் காலம் (Cold War) முழுவதும் பின்னர் அதனைத் தொடர்ந்து வந்த பல தசாப்தங்களிலும் அமெரிக்காவே பல உலகளாவிய விடயங்களில் தலைமை தாங்கி அதிக பணமுதலீடு செய்து ஆதிக்கம் செலுத்தி வந்தது. இப்போது அது கடந்த கால விடயமாகி விட்டது. தற்போது அமெரிக்கா தனது மேலாதிக்கத்தின்போது செலவிட்ட பணத்தை மீளப் பெறத் தொடங்குகிறது. அமெரிக்கா தனது சந்தைகளை அணுகுவதற்குக் கட்டணம் வசூலிப்பது, அத்துடன் நேட்டோ நாடுகளின் கூட்டுப் பாதுகாப்பிற்கு அதன் அதீத பங்களிப்பை குறைப்பது போன்ற முயற்சியில் ஈடுபடத் தொடங்கியுள்ளது. தற்போது உலகம் ஒரு திருப்புமுனை தருணத்தில் (Turning Point) இருக்கிறது. கனடாவும் தனது சொந்தப் பாதையை வகுக்க வேண்டிய நேரம் இது" என்றார்.

கனடியப் பிரதமர் மத்திய அரசிற்கான பொதுத்தேர்தல் பிரசாரகாலத்தில் அவர் வழங்கிய உறுதி மொழிகளான கனடிய இராணுவத்திற்குப் புதிய நீர்மூழ்கிக் கப்பல்கள், இராணுவ கவச வாகனங்கள் மற்றும் ட்ரோன்கள் (drones) வாங்குவது அத்துடன் புதிய தொழில்நுட்ப வசதிகளை செய்து கொடுப்பது போன்றவற்றை தனது உரையில் மீண்டும் வலியுறுத்தினார்.

புதிய $9.3 பில்லியன் பாதுகாப்புச் செலவினங்களை அறிவித்த பிரதமர் இது இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பதை அதிகரிக்கவும், தற்போதைய இராணுவ வீரர்களுக்கு சம்பள உயர்வை வழங்கவும், இராணுவத்திற்குரிய முக்கிய உபகரணங்கள் வாங்கவும் மற்றும் பாதுகாப்புத் துறை தளபாடங்களின் உற்பத்தியை விரிவாக்கவும் பயன்படுத்தப்படும் என்றார். நேட்டோவின் இலக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இரண்டு சதவீதத்தை கனடாவின் பாதுகாப்பு செலவினங்களுக்கு முதலிட கனடாவிற்கு மேலும் $20 பில்லியன் தேவைப்படும்.


Prime Minister Mark Carney visited Fort York Armoury in Toronto.
Thanks: Chris Young/The Canadian Press

கடந்த ஆண்டு நேட்டோ அதன் உறுப்பின நாடுகள், நேட்டோவின் இலக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் இரண்டு சதவீதத்தை பாதுகாப்பு செலவினங்களுக்கு முதலிட்டு, தங்கள் நாடுகளின் தனிப்பட்ட பாதுகாப்புத் தொழில் துறைகளின் திறனை அதிகரிக்க தேசிய திட்டங்களை உருவாக்க வேண்டும் எனக் கூறியிருந்தது. கனடா பல ஆண்டுகளாக இவ்வாறு GDPயின் இரண்டு சதவீதத்தை பாதுகாப்பு செலவினங்களுக்கு முதலிட முற்றிலும் தவிர்த்து வந்திருக்கிறது. 2024 ஜுலையில் அப்போதைய கனடியப் பிரதமரான ஜஸ்ரின் ரூடோ கனடா GDPயின் இரண்டு சதவீதத்தை 2032ஆம் ஆண்டிலேயே பாதுகாப்பு செலவினங்களுக்கு முதலிடக்கூடியதாக இருக்கும் என்று கூறியிருந்தார். கனடாவின் பாதுகாப்பு செலவினங்களுக்கான முதலீடு 2024ஆம் ஆண்டில் GDPயின் 1.37% ஆகவே இருந்தது.

2024இல் வோஷிங்டனில் நடந்த மாநாட்டில் அமெரிக்க மக்களவையின் ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக்கட்சியின் உறுப்பினர்கள் மற்றைய நட்பு நாடுகளைப்போல் அல்லாமல் கனடாவின் GDPயின் 2%ஐ பாதுகாப்பு செலவினங்களுக்கு முதலிடுவதற்கு ஒரு திட்டம் கனடிய மத்திய அரசிடம் இல்லை எனக் குறை கூறியிருந்தனர்.

தற்போதைய கனடியப் பிரதமர் நடப்பு நிதியாண்டிலேயே கனடா GDPயின் 2%ஐ பாதுகாப்பு செலவினங்களுக்கு முதலிட முன்வந்துள்ளது அமெரிக்கா உட்பட எல்லா நேட்டோ நாடுகளாலும் வரவேற்கப்பட்டுள்ளது.

மார்க் காணி தனது உரையில், "எங்கள் குறிக்கோள் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், அனைத்து எதிரிகளிடமிருந்தும் பாதுகாக்க தேவையான உறுதியை நேட்டோவிற்கு வழங்கவும் உறுதிப்பாடு அளிப்பதாகும். அத்துடன் எமது முதன்மையான குறிக்கோள் கனடியர்களைப் பாதுகாப்பது. நேட்டோ கணக்காளர்களை திருப்திப்படுத்துவது அல்ல" என்றும் கூறியிருந்தார்.

2024 மே மாத இறுதிப்பகுதியில் இருந்தே கனடிய மத்திய அரசின் அமைச்சர்கள் GDPயின் 2%ஐ பாதுகாப்புச் செலவினங்களுக்கு இவ் வருடம் முதலிடும் என சூசகமாகத் தெரிவித்து வந்திருக்கின்றனர்.

ஜுன் முதற்கிழமை Brusselsஇல் உள்ள நேட்டோவின் தலைமையகத்தில் கனடிய பாதுகாப்பு அமைச்சர் டேவிட் மக்கின்டி (David McGuinty) உரையாற்றும்போது, கனடியப் பிரதமர் கனடாவின் பாதுகாப்பு செலவின இலக்குகளை கனடா அடைவது பற்றி விரைவில் தெரிவிப்பார் என்று கூறியிருந்தார்.

ஜுன் முதலாம் திகதி நேட்டோவின் முன்னாள் தலைவர் ஜோர்ஜ் றொபேட்சன் (George Robertson) CBC ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் கனடாவின் தொழில் துறை அமைச்சர் மெலனி ஜோலி (Melanie Joly) கனடா இந்த ஆண்டு இறுதிக்குள் நேட்டோவிற்கான கனடாவின் பாதுகாப்பு செலவின இலக்கை அடையும் எனக் கூறியிருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

மார்க் காணி மத்திய அரசின் GDPயின் 2%ஐ பாதுகாப்புச் செலவினங்களுக்கு இந்த நிதியாண்டின் இறுதிக்குள் முதலிடும் திட்டத்தை எதிர்க்கட்சிகள் ஆதரிக்க வேண்டும் எனக் கேட்டிருந்தார். அத்துடன் அவர் இவ்வாறு முதலிடுவதற்காக மத்திய அரசு வரிகளை உயர்த்தாது என்றும், மத்திய அரசின் செலவினங்களை சில இடங்களில் குறைக்கும் எனவும் கூறி இருந்தார். அதனால் இப்பாதுகாப்பு செலவின அதிகரிப்பு எவ்வாறு மத்திய அரசின் வரவு-செலவுத்திட்டத்தைப் பாதிக்கும் என்ற கேள்வியே எதிர்க்கட்சிகளிடம் தற்போது எழுந்துள்ளது.

இந்த நிதியாண்டில் பாதுகாப்பிற்கான செலவினங்களை GDPயின் 2%ஆக உயர்த்துவதற்குப் பழமைவாதக்கட்சி முற்று முழுதாக ஆதரவு வழங்கும் எனத் தெரிவித்துள்ள பழமைவாதக் கட்சியின் தலைவர் பியர் பொலியவ் (Pierre Poilievre), அரசாங்கம் எங்கிருந்து பணத்தை இதற்கு செலவிட எடுக்கிறது என்பதை தெளிவாக அடையாளம் காட்டும் ஓர் வரவு செலவுத்திட்டத்தை விரைவில் வெளியிட வேண்டும் என்றார்.

புளக் குவிபெக்குவா கட்சியின் நாடாளுமன்ற அவைத்தலைவரான கிறிஸ்டின் நோமண்டின் (Christine Normandin) தமது கட்சி, மத்திய அரசு இந்நிதியாண்டில் பாதுகாப்பிற்கான செலவினங்களை GDPயின் 2%ஆக உயர்த்துவதற்கு ஆதரவு வழங்கும். ஆனால், அரசு ஒரு வரவு செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் எவ்வாறு அதிகார பூர்வமாக இவ்வாறு செலவிடும் என்ற கேள்வி தம்மிடம் இருப்பதாகக் கூறினார்.

நேட்டோ (NATO) என அழைக்கப்படும் வட அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு (North Atlantic Treaty Organization)

தொடர்ச்சி 05ஆம் பக்கம்









# House for Sale / Lease / Condo / BSMT

## Office Unit for Lease

GTA Square
Finch Ave. / Middlefield
2nd Floor Unit
Busy Mall in Scarborough
Under ground Parking

Matt Nadarajah*
Call : 416 960 6130

## Condo for Sale

2 BR. + DEN
2 Washroom
Spacious Balcony
UG Parking
Walk to Go Station

3 Years Old (Pickering)
Asking $649,900

Vishal Sarda*
Call : 416 629 1973

## Condo For Sale

Downtown Toronto
Condo for Sale

300 Front Street
2BR + 2WR Parking
$935,000

Deepak Dani **
Call : 416 930 9733

## House for Sale

Detached House
3BR + 1BR BSMT
Separate Entrance
Morningside | Sewells
Great Location

George Paranthaman**
Call : 416 277 9044

## Condo for Sale

2BR / 1WR
700 SF
Hwy 400 / Hwy 7

Higher Floor

Rajiv Agnihotri *
Call : 416 930 0684

## Condo For Rent

2BR + 2WR + Parking

Kennedy / Hwy 401

Tridel Building

Gulshan Sharma**
Call : 416 407 5911

## Condo for Rent

2 BR Condo
2 Wash Rooms
Kennedy / Eglinton

Walk to
Kennedy Subway

Tisi Para *
Call : 647 296 0596

## Condo for Sale

Toronto / Downtown
Studio
(Reve Condo)

Floor to Ceiling Window
Asking 429K

Preethi Pillai *
Call : 416 276 5297

## House for Sale

Detached 2 Storey
4BR + 1 BR
5 WR
Over 2000 SF

Markham
(14th AVE / 9th Line)

Amal Joseph*
Call : 416 300 8294

HOMELIFE
HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2

* Sales Rep.
** Broker

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.



Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

## MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST FOR ALL YOUR MORTGAGE NEEDS

| | |
|---|---|
| PURCHASE | MAJOR BANKS |
| REFINANCE | ALTERNATIVE LENDERS |
| SELF EMPLOYED | B LENDERS |
| BAD CREDIT | CREDIT UNIONS |
| INVESTMENT PROPERTY | TRUST COMPANIES |
| RENEWAL | PRIVATE LENDERS |

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE

Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# அனுர அரசின் தடுமாற்றம்

## – அரவின் –

தேசிய மக்கள் சக்தி அறுதிப் பெரும்பான்மை பெற்ற நாத்தாண்டிய பிரதேச சபையின் தொடக்க அமர்வு ஜூன் 2ஆம் திகதி இடம்பெற்றபோது, பெரும் குழப்பங்கள் நிகழ்ந்தன.

தேசிய கீதத்துக்குப் பதிலாக, தேசிய மக்கள் சக்தியின் பிரச்சாரப் பாடலான 'ரட்ட.. அனு ரட்ட' என்ற பாடல் ஒலி பரப்பப்பட்ட பின்னர், முதல் அமர்வு தொடங்கப்பட்டதே, அந்தக் குழப்பத்துக்கு காரணம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், பதவிக்கு வந்த பின்னர், இதுபோன்ற பல குழப்பங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

சுதந்திரதினம், வெசாக், கிறிஸ்மஸ் போன்ற பண்டிகைகளின்போது, சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற, சிறு குற்றம் இழைத்த கைதிகள் அல்லது தண்டப்பணம் செலுத்த முடியாமல் சிறையில் இருக்கின்ற கைதிகள், ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்படுவது வழக்கம்.

கடந்த வெசாக் தினத்தன்று, விடுதலை செய்யப்பட்ட 388 கைதிகளில், அதுல திலகரத்ன என்பவரும் அடங்கியிருந்தார். இவர் மே 2ஆம் திகதி 4 மில்லியன் ரூபா பணத்தை மோசடி செய்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர். 10 நாட்களில் அவர் ஜனாதிபதியின் பொது மன்னிப்பில் அனுராதபுர சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார். இதனை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பெரேரா நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தியதை அடுத்து, பூகம்பம் ஒன்று வெடித்திருக்கிறது.

வழக்கமான ஜனாதிபதி பொதுமன்னிப்பு நடைமுறைகளை பின்பற்றியே கைதிகள் விடுவிக்கப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் கூறியது. ஜனாதிபதி செயலகம் விசாரணைக்கு உத்தரவிட்டிருப்பதாகக் கூறியது. அந்த விசாரணையில், அதிர்ச்சியான தகவல்கள் தெரிய வந்திருக்கின்றன.

அதுல திலகரத்ன, மாத்திரமல்ல, இன்னொரு கைதியும், அனுராதபுர சிறையிலிருந்து, ஜனாதிபதி பொதுமன்னிப்புக்கு அங்கீகாரம் அளிக்கப்படாமல் விடுவிக்கப்பட்டுள்ளது உறுதியாகியிருக்கிறது.




அதுமாத்திரமன்றி, கடந்த கிறிஸ்மஸ் பண்டிகையின்போது 57 பேரும், சுதந்திர தினத்தன்று 11 பேரும் இவ்வாறு சட்ட விரோதமாக விடுவிக்கப்பட்டுள்ளனரென சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் கூறியிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்னர், கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 323 கொள்கலன்கள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் உத்தரவின் பேரில், விடுவிக்கப்பட்டன. அவை சிவப்பு முத்திரையிடப்பட்டு சுங்கத் திணைக்களத்தினால், தடுத்து வைக்கப்பட்டிருந்தவை. அவற்றில் சந்தேகப்படும்படியான பொருட்கள் இருக்கலாம் என்பதால், சிவப்பு முத்திரையிடப்பட்டிருந்தன. ஆனால், எந்தச் சோதனையுமில்லாமல், அக்கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டதில், சர்ச்சைகள் எழுந்தன. அது குறித்து விசாரணை நடத்துவதாகக் கூறிய அரசாங்கம் அதற்கு, அமைச்சர் களைக் கொண்ட குழுவையே நியமித்தது.

அரசதரப்பின் மீதான குற்றச்சாட்டை அரச தரப்பே விசாரணை செய்யும்போது எவ்வாறு நீதியைக் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்கட்சிகள் கேள்வி எழுப்புகின்றன.

சிவப்பு முத்திரையிட்ட கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட விவகாரத்தில், பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கூறப்படுகின்ற நிலையில், ஆளும்கட்சி அதற்கு சரியான பதிலைக் கொடுக்க முடியாமல் திணறுகின்றது.

இப்படியாக, தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்தபிறகு பல்வேறு விடயங்களில் எடுத்த முடிவுகள் தவறாக அமைந்திருக்கின்றன அல்லது தவறான பாதைக்கு அரசாங்கத்தைக் கொண்டு சென்று இருக்கின்றன.

அனுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்தவுடன் அரசாங்க இல்லங்களில் தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதிகளை, அங்கிருந்து வெளியேற வேண்டும் என, பகிரங்க மேடைகளில் அறிவித்தார்.

அவர்களுக்கு அதிகளவு பணத்தை, அரசாங்கம் செலவிடுவதாகவும், அவர்கள் தங்கியிருக்கும் இல்லங்கள் மிகமிக விசாலமானவை, அவற்றை வாடகைக்கு விடுவதன்மூலம் அதிக வருமானத்தை அரசாங்கம் பெறமுடியும் என்றும் கூறினார். இது ஓர் உணர்வுபூர்வமான விவகாரம் என்பதையோ, அடிப்படை நியாயமற்ற ஒன்று என்பதையோ, புரிந்து கொள்ளாமல், அந்த விவகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டார் அனுரகுமார திசாநாயக்க.

அரசாங்கம் கடிதம்மூலம் அறிவித்தால், முன்னாள் ஜனாதிபதிகள் என்ற முறையில் வழங்கப்பட்ட இல்லத்தை விட்டு வெளியேறுவோம் என மஹிந்த ராஜபக்சவும், மைத்திரிபால சிறிசேனவும் கூறினர். ஆனால் அரசாங்கம் இதுவரை அந்தக் கடிதத்தை அனுப்பவில்லை.

ஏனென்றால் அப்படியான ஒரு காரியத்தின் மீதுள்ள ஆபத்தை அது பின்னரே புரிந்து கொண்டது. இப்பொழுது மஹிந்த ராஜபக்சவையோ, மைத்திரிபால சிறிசேனவையோ ஜனாதிபதியோ அமைச்சர்களோ வெளியே போ என்று கூறுவதே இல்லை. அதனை அவர்கள் மறந்து விட்டனர்.

காலம் காலமாக ஆனையிறவு உப்பு என சந்தைப்படுத்தப்பட்டு வந்த உப்பின் பெயரை, ரஜா லுணு என்று மாற்றம் செய்தது தேசிய மக்கள் சக்தி அரசாங்கம். அதற்கு தமிழர் தரப்பில் இருந்து எதிர்ப்புக் கிளம்பியபோது, உப்பில் சுவை முக்கியமா, பெயர் முக்கியமா என்று நாடாளு மன்றத்தில் கேலிக்குரிய வகையில், கேள்வி எழுப்பினார் அமைச்சர் பிமல் ரத்நாயக்க.

அப்படிக் கேள்வி எழுப்பியதன்மூலம் தாங்கள் புத்திசாலிகள் என்று மார்தட்டியும் கொண்டனர். ஆனால், இப்பொழுது பழையபடி ஆனையிறவு உப்பு என்று பெயர் மாற்றம் செய்யப்படுவதாக, அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

உப்புக்கு சுவைதான் முக்கியம் பெயர் முக்கியமில்லை என்றால், அரசாங்கம் ஏன் மீண்டும் பெயரை மாற்றியது? இப்படியாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தடுமாற்றம் ஏராளம்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர், செய்ய வேண்டிய வேலைகளைச் சரியாகச் செய்யவில்லை. வேண்டாத வேலைகளைச் செய்யப்போய் விபரீதங்களையே தேடிக்கொள்கிறது.

அனுர அரசாங்கம் பதவிக்கு வரும்போது, அதனிடம் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு இருந்தது.

* இலஞ்சம்-ஊழலை ஒழிக்க வேண்டிய பொறுப்பு இருந்தது.
* சட்டம் ஒழுங்கை மீட்க வேண்டிய பொறுப்பு இருந்தது.
* இனப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு இருந்தது.
* போர்க்கால மீறல்கள் தொடர்பான பொறுப்புக்கூறல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டிய பொறுப்பு இருந்தது.

இப்படிப் பொறுப்புக்களின் நீண்ட பட்டியலை அது கொண்டிருந்தபோதும், அந்தப் பட்டியல்கள் எல்லாம் இப்போதும் எந்த மாற்றமும் இன்றி, அப்படியே இருக்கின்றன.

அப்படியானால் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தபின்னர் எந்தப் பிரச்சினைகளையும், எந்த வாக்குறுதிகளையும் தீர்க்கவில்லையா? தீர்ப்பதற்கு முயற்சிக்க வில்லையா?

எந்தத் திட்டத்தையும் செயற்படுத்தும் துணிச்சல் இவ் அரசாங்கத்திடம் இல்லையா? எனப் பல கேள்விகள் எழுகின்றன.

இந்த ஆண்டு மூலதனத் திட்டங்களுக்காக அரசாங்கம் 1.4 ட்ரில்லியன் ரூபா நிதியை ஒதுக்கிய போதும், முதல் நான்கு மாதங்களில் 136 பில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்பட்டுள்ளதாகவும், இதேநிலை நீடித்தால், பெரும்பாலான மூலதன செலவின ஒதுக்கீடு செலவிடப்படாமல் போகும் என்றும் எச்சரித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர்.

ஆண்டு முழுவதற்குமான ஒதுக்கீட்டில் 10 சதவீதத்தைக்கூட, மூன்றில் ஒரு பங்கு ஆண்டில் செலவிடத் திராணியற்றதாக இந்த அரசாங்கம் இருக்கிறது. இதுதான் அதன் மிகப்பெரிய பலவீனமாக மாறி இருக்கிறது.

கோட்டாபய ராஜபக்ச அரசியலுக்கு வந்தபோது தனக்குப் பின்னால், ஒரு மேதாவிக் கூட்டம் இருப்பதாகக் காண்பித்துக் கொண்டார்.

வியத்மக, எலிய போன்ற அமைப்புகள், அவருக்கு பின்னால் இருந்தன. அந்த அமைப்புகளே, அவரை அரசியலுக்குக் கொண்டு வருவதற்குத் தூண்டு கோலாக விளங்கின.

துறைசார் வல்லுநர்களெனக் கூறப்பட்டோர் அதிகம்பேர், அந்த அமைப்புகளில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர்.

அவர்களில் பலர் தேர்தலிலும் போட்டியிட்டனர். சிலருக்கு அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட்டன. ஆனால் பதவிக்கு வந்தபின்னர், கோட்டாபய ராஜபக்ச, அந்த மேதாவிகளின் கருத்துகளை நம்பி மோசம் போனார். அவர்கள் கோட்டாபாய ராஜபக்சவுக்கு சரியான ஆலோசனைகளைக் கூறவில்லை. இதனால் அவர்களுக் கும் அவருக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டது, அவர்கள் அவரிடத்திலிருந்து விலகிச் சென்றனர். கடைசியில் கோட்டா பய ராஜபக்சவும் பதவி விலகும் நிலை ஏற்பட்டது.

அதேபோலத்தான், ஜேவிபி தன்னை உருமாற்றிக் கொண்டது.

தொடர்ச்சி 5ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™
35ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலகப் பொறுப்பாளர்: சுதர்சினி D.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA Square, 5215 Finch Ave.E.,
#201, Toronto, ON M1S 0C2, Canada
TEL- 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# நேட்டோ செலவின....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

1949ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4ஆம் திகதி வோஷிங்டன் டி.சியில் கையொப்பம் இடப்பட்டு உருவானது. அப்போது இந்த ஒப்பந்தம் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்தம் என்றும் (North Atlantic Treaty) வோஷிங்டன் ஒப்பந்தம் என்றும் (Washington Treaty) அழைக்கப்பட்டது.

அப்போது United States, United Kingdom, Canada, Portugal, Norway, Netherlands, Luxemburg, Italy, Iceland, France, Denmark மற்றும் Belgium உட்பட 12 நாடுகளே நேட்டோவில் உறுப்பினர்களாக இருந்தனர்.



தற்போது 30 ஐரோப்பிய நாடுகளும் 2 வடஅமெரிக்கா நாடுகளுமாக மொத்தமாக 32 நாடுகள் நேட்டோவில் உறுப்பினர் களாக இருக்கின்றனர். இறுதியாக நேட்டோவில் உறுப்பினராகச் சேர்ந்த நாடு Sweden ஆகும். இது 2024 மார்ச் 7ஆம் திகதி நேட்டோவில் உறுப்பினராகச் சேர்ந்தது.

நேட்டோ உறுப்பின நாடுகளின் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 2%ஐ தமது நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்களுக்கு அர்ப்பணிக்க வேண்டும் என 2006ஆம் ஆண்டில் நேட்டோ நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்புதலைத் தொடர்ந்து 2014ஆம் ஆண்டில் நேட்டோ உறுப்பின நாடுகளின் அரச தலைவர்கள் தமது நாடுகளின் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2%ஐ தமது நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிட உத்தியோக பூர்வமாக உறுதி செய்தனர். அவர்கள் இது நேட்டோ நாடுகளின் கூட்டணியின் தொடர்ச்சியாக இராணுவத்தை தயார் நிலையில் வைத்திருக்க உறுதி செய்யும் என்று அறிக்கை விட்டனர்.

ரஷ்யாவின் கிரிமியாவின் (Crimea) சட்ட விரோதமான இணைப்பிற்கும், மத்திய கிழக்கில் பரந்த உறுதியற்ற தன்மைக்கும் பதிலளிக்கும் விதமாகவே இந்த முடிவு நேட்டோ உறுப்பின நாடுகளால் எடுக்கப் பட்டது. 2014ஆம் ஆண்டில் மூன்று நாடுகள் மட்டுமே GDPயின் 2%ஐ பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிட்டன.

2021இல் 6 நாடுகள் மட்டுமே GDPயில் 2%ஐ தமது நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிட்டன. ஆனால், 2024ஆம் ஆண்டில் நேட்டோ உறுப்பின நாடுகளில் 23 நாடுகள் GDPயின் 2%ஐ தமது நாடுகளின் பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிடுகின்றன.



Prime Minister Mark Carney's announcement of rapidly scaling up defence spending. Thanks:CBC

இதுவரை கனடா உட்பட 8 ஐரோப்பிய நாடுகளே தமது அரச தலைவர்கள் 2014 ஆம் ஆண்டு நேட்டோ மாநாட்டில் உறுதியளித்த GDPயின் 2%ஐ தமது நாடுகளின் பாதுகாப்புச் செலவினங் களுக்கு முதலிடத் தவறிய நாடுகள்.

தமது GDPயின் அதிகமாக அதாவது 4.12%ஐ தமது நாட்டின் பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிடும் நாடாக Poland இருக்கிறது. Iceland நாட்டிற்கு இராணுவம் இல்லை. அது முற்று முழுதாக நேட்டோவின் தயவில் இருக்கிறது. இதனால் Iceland நாட்டின் பாதுகாப்பு செலவினங்கள் அவர்களுடைய GDPயின் 0%ஆக இருக்கிறது. Belgium, Luxemburg, Solvenia, மற்றும் Spain ஆகிய நான்கு நேட்டோ




உறுப்பின நாடுகள் 2024ஆம் ஆண்டில் தமது GDPயின் 1.3%ஐ மட்டுமே தமது நாடுகளின் பாதுகாப்புச் செலவினங் களுக்கு முதலிட்டன. கனடா நேட்டோ உறுப்பின நாடுகளில் மிகக்குறைந்த சதவீதத்தை தமது பாதுகாப்பிற்கு செலவிடுவதில் 6ஆம் இடத்தில் இருக்கிறது. அது GDPயின் 1.37%ஐ மட்டுமே 2024இல் கனடாவின் பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிட்டது.


Defence Minister David McGuinty at the defence trade show. Thanks: Sean Kilpatrick/The Canadian Press.

கனடா தவிர்ந்த ஏனைய நேட்டோ நாடுகள் தமது எல்லைப்புறப் பாதுகாப்புப் படைக்குரிய செலவினங்களை நாட்டின் பாதுகாப்பு செலவினங்களில் சேர்க்கின் றன. ஆனால், கனடாவில் கனடிய கடலோர காவல்படை, தேசிய பாதுகாப்பு அமைச்சின்கீழ் இல்லாமல் மீன்வளத்துறை யின்கீழ் ஓர் குடிசார் நிறுவனமாக இருப்பதால் அதற்கு வருடாந்தம் கனடிய மத்திய அரசு செலவழிக்கும் $2.5 பில்லியன் கனடிய பாதுகாப்பு செலவி னங்களுக்குள் வருவதில்லை. தற்போதைய லிபரல் அரசு கனடிய கடலோர காவல் படையை தேசிய பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவந்து அதற்குரிய வருடாந்த $2.5 பில்லியன் செலவையும் கனடாவின்


The Canadian military is ramping up training in winter conditions. Thanks: Natalie Weickel/CBC

பாதுகாப்புச் செலவினங்களுக்குள் சேர்க்கத் திட்டமிட்டுள்ளது. இதனால் கனடாவிற்கு GDPயின் 2%ஐ பாதுகாப்புச் செலவினங்களுக்கு முதலிடத் தேவைப் படும் மேலதிக $20 மில்லியன் $17.5 பில்லியனாகக் குறைய வாய்ப்புள்ளது.




# அனுர அரசின்...

4ஆம் பக்கத்தொடர்ச்சி

பல்வேறு தொழில்சார் அமைப்புகளை, தொழிற்சங்க அமைப்புகளை ஒருங் கிணைத்து தேசிய மக்கள் சக்தி என்ற போர்வைக்குள் பதுங்கியது.

ஜேவிபியின் கொள்கை வேறு, தேசிய மக்கள் சக்தியின் கொள்கை வேறு என்றவாறு, ஒரு தோற்றப்பாடு ஏற்படுத்தப் பட்டது. ஆனால் இரண்டுமே ஒன்றுதான். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திலும் படித்த மேதாவிகள் பெருமளவில் இருக்கின்றனர்.

கலாநிதிப் பட்டம் பெற்றவர்கள், கலாநிதிப் பட்டம் பெறாமலேயே பெற்றதாக காட்டிக் கொள்வோர், மருத்துவர்கள், சட்டத்தரணி கள் என்று துறைசார் வல்லுநர்கள் பலர் அதில் அங்கம் வகிக்கின்றனர்.

அரசாங்கத்தில் அவர்கள் அமைச்சர்களா கவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாக வும், அரச நிர்வாக கட்டமைப்புகளின் பொறுப்பு வாய்ந்தவர்களாகவும் பதவி வகிக்கின்றனர். ஆனால் அவர்கள் அரசாங்கத்தை வழிநடத்துகின்ற முறையை சரியாகக் கற்றுக்கொள்ளவில்லை. சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை.



இதனால் அனுரகுமார அரசாங்கமும் கோட்டாபய ராஜபக்சவின் வழியிலேயே பயணிக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது.

விளையும் பயிரை முளையிலேயே தெரியும் என்பர். அனுரகுமார திசாநாயக்க வின் அரசாங்கத்தின் செயற்பாடுகளும் நடவடிக்கைகளும் முடிவுகளும் குழப்பம் நிறைந்தவையாக இருக்கின்றன.

# மக்களாணையும் தமிழரசும்

– முகிலன் –

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது யார் என்ற பலப் பரீட்சை இப்போது ஆரம்பித்திருக்கிறது.

வடக்குக் கிழக்கை பொறுத்தவரையில் குறிப்பாக, வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பலப்பரீட்சை கடுமையானதாக மாறியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில், தமிழரசுக் கட்சி 35இற்கும் அதிகமான உள்ளூராட்சி சபைகளில் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தது.

ஆனால் புதுக்குடியிருப்பு, வெருகல், மண்முனை தெற்கு, போரதீவுபற்று, கரைச்சி மற்றும் பூநகரி ஆகிய 6 உள்ளூராட்சி சபைகளில் மாத்திரம் அந்தக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்தன.

ஏனைய சபைகளில், மூன்றில், தமிழ் தேசிய பேரவையும், ஒன்றில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியும் அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தன. ஆனாலும் இந்த சபைகளில் எந்தத் தரப்பும் தனித்து நின்று ஆட்சி அமைக்க முடியாத நிலை காணப்படுகிறது.

தேர்தலின்போது, தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் பிரதான எதிரியாகக் கருதி பிரச்சாரம் மேற்கொண்டது, தேசிய மக்கள் சக்தியைத்தான்.

ஆனால் தேர்தலுக்குப் பிறகு, தமிழ்த் தேசியக் கட்சிகள் மத்தியில் அதிக ஆசனங்களை அல்லது வாக்குகளைப் பெற்ற கட்சிகள் ஆட்சியமைப்பதற்கு வாய்ப்பளிப்பது தொடர்பாக தமிழரசுக் கட்சி கருத்து வெளியிட்டது.

தமிழ்த் தேசிய பேரவையும்கூட அதே போன்ற ஒரு நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியது. இது ஆக்கபூர்வமான ஒரு செயற்பாடாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஏனென்றால் தமிழ்த் தேசியக் கட்சிகள், சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பது, ஒற்றுமையாக செயற்படுவதற்கான வாய்ப்புகளை உருவாக்கும் என்ற நம்பிக்கை இலேசாகக் காணப்பட்டது. ஆனால் அடுத்த சில நாட்களிலேயே நிலைமை மாறியது.

தமிழரசுக் கட்சி, ஆட்சியமைப்பது குறித்து, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் பேச்சு நடத்தியது. எனினும் எந்த ஒரு சபையிலும் விட்டுக் கொடுப்புக்கு அந்தக் கட்சி தயாராக இருக்கவில்லை.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi
ශ්‍රීලංකෙයි තමිල් අරසු කච්චි

இது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் சூழலை உருவாக்கவில்லை. அதே வேளை, தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடனும் பேச்சு நடத்தியது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொள்கை அடிப்படையிலான கூட்டு ஒன்றுக்கு தயாராகும் தரப்புகளுடன் தாம் இணைந்து செயற்படத் தயார் என்று அறிவித்தது.

தமிழரசுக் கட்சி அதற்குத் தயாராக இருக்கவில்லை. அதேவேளை இந்த சந்திப்பின்போது அதிக ஆசனங்களைப் பெற்ற தரப்புகள் ஆட்சியமைப்பதற்கு குறுக்கே நிற்க மாட்டோம் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருந்தார். இதற்குப் பின்னர் காட்சிகள் திடீரென மாற்றமடைந்தன.

ஒரு பக்கத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துடன் பேச்சு நடத்திய ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ் தேசிய பேரவையுடன் ஒரு கொள்கை உடன்பாடு செய்து கொள்வதற்கு இணங்கியது.

ஒற்றையாட்சியையும் 13ஆவது திருத்தச் சட்டத்தையும் நிராகரிக்கும் வகையில் ஓர் உடன்படிக்கையிலும் அந்த இரு அணிகளும் கையெழுத்திட்டன.

தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்த வரையில் ஒப்பீட்டளவில் ஒரு முன்னேற்றகரமான உடன்பாடாக இது பார்க்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செயல்படுவதற்கும் அடுத்து வரக்கூடிய மாகாணசபைத் தேர்தலை கூட்டாக எதிர் கொள்வதற்கான சாத்தியப்பாட்டை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. இந்தக் கூட்டு உடன்பாடு கையெழுத்திடப்பட்ட பின்னர், கஜேந்திரகுமாரின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது.

இரண்டு அணிகளும் இணைந்து கொள்ளும்போது யாருக்கு அதிகம் ஆசனங்கள் கிடைக்கிறதோ அவர் ஆட்சி அமைக்கலாம் என்ற கருத்தை அவர் முன் வைத்தார்.

கூட்டணிகள் ஏற்படுகின்றபோது இவ்வாறு தான் அரசியல் கணக்குகள் பார்க்கப்படுவது வழக்கம்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் 14 உள்ளூராட்சி சபைகளிலும் வன்னியில் நான்கு உள்ளூராட்சி சபைகளிலும் தமது அணி ஆட்சியமைக்க வாய்ப்புள்ளதாக கஜேந்திரகுமார் கூறியிருக்கிறார்.

அவர் எந்தக் கணக்கின் அடிப்படையில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார் என்பதை வரும் நாட்களில்தான் தெரிந்து கொள்ள முடியும். அதேபோல, மற்றொரு பக்கத்தில் தமிழரசுக் கட்சி தனித்துப் போயிருக்கிறது.

தமக்கு எதிராக கஜேந்திரகுமார் தலைமையில் ஒரு பலமான அணி உருவாவதை தமிழரசுக் கட்சி விரும்பவில்லை.

தமக்கு எதிராக உருவாகும் ஒரு கூட்டை, தமிழரசுக் கட்சியினால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. இது தங்களின் அரசியல் எதிர்காலத்தை பாதிக்கும் என தமிழரசுக் கட்சி கருதுகிறது. அதனால் இந்தக் கூட்டை எப்படியாவது குழப்ப வேண்டும் என்ற குறி அவர்களுக்கு இருக்கிறது. அதேவேளை, வடக்கில் சபைகளில் ஆட்சியமைப்பது அவர்களுக்கு கௌரவ பிரச்சினையாக மாறி விட்டது. அதற்காக ஈபிடிபியுடன் கூட்டணி அமைப்பதற்கும் தமிழரசுக் கட்சி தயாராகி விட்டது.

கால் நூற்றாண்டுக்கு மேலாக ஈபிடிபியுடன் முரண் அரசியல் நடத்திக் கொண்டிருந்த தமிழரசுக் கட்சி, திடீரென தமது அரசியல் இலாபத்துக்காக மாறுகிறது.

ஸ்ரீதர் தியேட்டருக்குச் சென்று டக்ளஸ் தேவானந்தாவிடம் ஆதரவு கேட்டு பேச்சு நடத்தியிருக்கிறார் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம். இது தமிழரசுக் கட்சியினரால்கூட பொறுத்துக்கொள்ள முடியாத செயலாக இருக்கிறது.

ஏகப்பட்ட விமர்சனங்களை தமிழரசுக் கட்சிக்கு எதிராகவும், சி.வி.கே.சிவஞானம் மற்றும் சுமந்திரனுக்கு எதிராகவும் உருவாக்கியிருக்கிறது. இந்த அலை சாதாரணமானதாக இருக்க வாய்ப்பில்லை.

யாழ்ப்பாணத்தின் 17 சபைகளில் ஆட்சி அமைப்போம் என்று கூறும் தமிழரசுக் கட்சி தனித்து நின்று எப்படி சாதிக்கப் போகிறது?

ஈபிடிபியின் ஆதரவுடன் 17 சபைகளிலும் தமிழரசுக் கட்சி ஆட்சியமைப்பது என்பது நடக்க முடியாத காரியம். அப்படியானால் அது தேசிய மக்கள் சக்தியின் ஆதரவைப் பெற வேண்டி இருக்கும்.

தேசிய மக்கள் சக்தியை எதிரிகளாகக் காட்டி, இனவாதிகளாக மக்கள் முன் அடையாளப்படுத்தி வெற்றியைப் பெற்றுக் கொண்ட தமிழரசுக் கட்சி, எந்த முகத்துடன் அந்தக் கட்சியின் ஆதரவைத் தேட முனைகிறது என்று தெரியவில்லை.

தங்களை எதிர்த்தோர், எதிர்த்து பிரசாரம் செய்தோர் இப்பொழுது தங்களை நாடி வருகின்றனர் என்று அமைச்சர் சந்திரசேகர் கூறியிருக்கிறார். அதன் அர்த்தம் என்ன என்பது தமிழரசுக் கட்சிக்குத்தான் நன்றாகத் தெரியும்.

அவர்கள் சந்தர்ப்பவாத அரசியலைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது இப்போது வெளிச்சமாகி விட்டது.

கடந்த தேர்தலில் இரண்டாம் இடத்தைப் பிடித்த தேசிய மக்கள் சக்தி, சில சபைகளைக் கைப்பற்றுவோம் எனக் கூறிக் கொண்டிருக்கிறது. அது எப்படி என்று தெரியவில்லை.

சிலவேளைகளில் தமிழரசுக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அந்தக் கட்சி சபைகளைக் கைப்பற்றினாலும் ஆச்சரியப்பட முடியாது.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணங்கிப் போய், தமிழரசுக் கட்சியினால் ஆட்சி அமைத்திருக்க முடியும்.

அதற்கான வாய்ப்புகளை தமிழரசுக் கட்சி சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

மாறாக ஜேவிபி போன்ற சிங்களப் பேரினவாதக் கட்சிகள், ஈபிடிபி போன்ற தரப்புகளுடன் இணைந்து ஆட்சியமைக்க முற்படுகிறது.

2023ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது, அதில் தனித்துப் போட்டியிடப் போவதாக தமிழரசுக் கட்சி முடிவு செய்தது. அதுவே தமிழ்த் தேசியக்

தொடர்ச்சி 8ஆம் பக்கம்

Get in touch for your perfect home!
PUSHPA KANAGARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 647.786.3436
pushpakana33@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HOMELIFE/GTA REALTY INC.,
BROKERAGE INDEPENDENTLY OWNED & OPERATED
5215 Finch Ave. E #203, Toronto, ON. M1S 0C2
B: 416.321.6969 F: 416.321.6963 5215



# எம்.ஜி.ஆர். முதல் மு.க. ஸ்டாலின் வரை! – நேர்காணல் – எழுத்தாளர் இந்துமதி

## கண்ணன்

கைபேசி காலத்துக்கு முன்பு, தமிழரின் பொழுதுபோக்கை தமிழ் பத்திரிகைகள் ஆக்கிரமித்திருந்த காலகட்டத்தில், வெகுஜன வாசகர்களின் மனதைக் கொள்ளையடித்த எழுத்தாளர்களில் குறிப்பிடத்தகுந்தவர், இந்துமதி. 100 நாவல்கள், 100இற்கும் மேல் சிறுகதைகள் என இவரது எழுத்துப் பயணம் நீண்டது. எழுத்துக்கு அப்பால் எம்.ஜி.ஆர்., மு. கருணாநிதி, ஜெ.ஜெயலலிதா, கருப்பையா மூப்பனார் என அன்றைய தமிழக முன்னணி அரசியல்வாதிகளுடன் நெருக்கமான நட்புக் கொண்டிருந்தவர். இன்றும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் குடும்பத்துக்கு நெருக்கமானவராக அறியப்படுபவர். தமிழ் எழுத்தாளர்களில் வேறு யாருக்கும் இல்லாத மிக அபூர்வமான பக்கம் இது. சென்னையில் வாழும் இந்துமதியைச் சந்தித்து, அவரது அரசியல் பக்கம் குறித்து உரையாடினோம்.

**கேள்வி** - இன்றைய தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் மனைவி துர்கா ஸ்டாலினின் நெருங்கிய தோழிகளில் ஒருவர் நீங்கள். அவருடனான நட்பு பற்றி சொல்ல முடியுமா?

**பதில்** - கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து வருட பழக்கம் எனக்கும் அவருக்கும். கலைஞர் இருந்தபோதிலிருந்து, அவரது கணவர் துணை முதல்வராக இருந்தபோதிலிருந்து பழக்கம். கலைஞருடன் எனக்கு நல்ல நட்பு இருந்தது. அதன் மூலம் அவர் வீட்டில் எல்லோருடனும் எனக்கு நட்பு ஏற்பட்டது. கலைஞரைப் பார்க்கப் போகும்போதெல்லாம் துர்காவை சந்தித்திருக்கேன். ஸ்டாலினையும் சந்தித்திருக்கேன். கலைஞரின் கோபாலபுரம் வீட்டில் ரொம்ப சின்ன ரூம்தான் துர்காவுடையது. அந்த வீட்டில் எல்லா அறைகளுமே சிறியதுதான். எட்டுக்கு பத்துதான் இருக்கும். அந்த வீட்டில்தான் முதன் முதலில் பார்த்தேன். முதல் பார்வையிலேயே மிகவும் பிடித்துப் போனது அவங்களை. அப்போதிலிருந்தே துர்கா எனக்குப் பிடித்தமானவர். மிகவும் பிரிய மானவர். அவருடைய எளிமை எனக்கு மிகவும் பிடிக்கும். வெளிப்படையான பேச்சு பிடிக்கும். எல்லாவற்றிற்கும் மேலான பக்தி பிடிக்கும். அவர் எப்பேர்ப் பட்ட மனுஷி. நான் ரொம்ப சாதாரண மனுஷி. ஆத்மார்த்தமான அன்பு தவிர வேறு இல்லாதவள். அன்புக்காக, அன்பை மதித்து என் வீடு தேடி வந்து பேசுவார். நீங்கள் நம்ப மாட்டீர்கள், அவங்க வீட்டில் இருந்து பாபா கோவிலுக்கு நடந்தே வருவாங்க. பாபா கோவிலில் உட்கார்ந்தாங்க என்றால், சிலை, மாதிரி அரை மணி நேரம் உட்கார்ந்து வேண்டுவாங்க. முதல்வர் மனைவி என்கிற எண்ணமோ தலைக்கனமோ சிறிதுகூட அவங்களிடம் பார்க்க முடியாது.

**கேள்வி** - உங்கள் சந்திப்புகளில் என்ன பேசிக் கொள்வீர்கள்?

**பதில்** - எல்லாப் பெண்களும் என்ன பேசிக்குவாங்களோ அதைத்தான் நாங்களும் பேசிக்குவோம். உடுத்திக்கொண்ட புடவை, சமையல், ஆன்மிகம் இப்படித்தான் எங்கள் பேச்சு இருக்கும். அவங்க நல்லா சமைப்பாங்க. எளிமையான சமையல். சட்டி பானைகளில்கூட சமைப்பாங்க. எது செய்தாலும் நேர்த்தியா



செய்வாங்க. சில நேரங்களில் எங்கள் சந்திப்புகளில் அரசியலும் பேசிக்கொள்வோம். துர்கா ஸ்டாலின் என்பதுதான் அவர்களுக்கு வீட்டில் வைத்த பெயர். ஆனால், திருமணத்துப் பிறகு சாந்தா ஸ்டாலின் என்று அவருக்கு கலைஞர் பெயர் வைத்தார். ஆனால், இப்போது துர்கா ஸ்டாலின் என்றே அழைக்கப்படுகிறார். இரண்டு பெயருக்குமே பொருத்தமானவர் அவர். சாந்தா என்ற பெயருக்கேற்ப அவ்வளவு சாந்தமானவர். அதே நேரம் துர்கா என்ற பெயருக்கேற்ப அவ்வப்போது துர்கையாகவும் மாறக்கூடியவர். நியாயமான காரணங்களுக்கு மிகவும் கோபப்படுவார். அதுபோல் தனது மனதிற்கு சரி என்று பட்டதை செய்யக்கூடியவர். மிக தைரியமானவர். “மாமா எனக்குக் கடவுள் பக்தி உண்டு. அதனால் வீட்டில் சிறிய பூஜை அறை வைத்துக் கொள்கிறேன்” என்று கலைஞரிடமே மனம் விட்டுப் பேசியவர்.

**கேள்வி** - நீண்டகாலமாக அவருடன் நீங்கள் பழகி இருந்தாலும் அப்போது எல்லாம் அவரது கணவர் ஸ்டாலின் முதல்வரில்லை. இப்போது முதல்வர். இந்த மாற்றம் பழகும் விதத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறதா?

**பதில்** - இல்லவே இல்லை. அன்றைக்கு எப்படி பழகினாங்களோ அப்படித்தான் இன்னைக்கும் பழகுறாங்க. ஒரு வித்தியாசத்தையும் நான் அவங்களிடம் பார்க்கவில்லை. இது ரொம்ப அபூர்வமானது. அவங்களுடைய சிறப்பு அம்சமா இதை நான் பார்க்கிறேன். முதல்வர் மனைவி என்ற கர்வம் கொஞ்சமும் அவங்களிடம் இல்லை.

**கேள்வி** - துர்கா ஸ்டாலின் மிகுந்த கடவுள் நம்பிக்கை உடையவர். ஊர், ஊராக கோயில்களுக்கு தேடி செல்பவர். ஆனால், அவரது கணவர் ஸ்டாலின், மகன் உதயநிதி கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். இது குறித்து அவர் எப்போதாவது பேசியிருக்கிறாரா?

**பதில்** - இல்லை. அவர்களது கொள்கைகளை, அரசியலை துர்கா மதிக்கிறார். அது மாதிரி இவங்களின் கடவுள் நம்பிக்கையையும் அவர்கள் மதிக்கின்றனர். ஒருமுறை சீரடி போய்விட்டு திரும்பியதும் அவங்க வீட்டுக்குப் போய் பிரசாதம் கொடுத்தேன். அப்போது ஸ்டாலின் இருந்தார். அவரிடம் கொடுத்ததும், “அவங்களிடம் கொடுங்கள்” என்று துர்காவை வாங்கிக்க சொன்னார். கலைஞர் மாதிரி ஸ்டாலினும் மற்றவர்களின் நம்பிக்கைகளை மதிக்கக்கூடியவர். தனது மனைவியானாலும், கட்சி கொள்கைகள் படிதான் நடந்துகொள்ள வேண்டும் என்று இல்லாமல், துர்காவின் எண்ணங்களை மதிக்கிறார். எனக்கு ஸ்டாலினிடம் பிடித்தமானவற்றில் இதுவும் ஒன்று.

**கேள்வி** - துர்கா ஸ்டாலின் பொழுது போக்குகள் என்ன?

**பதில்** - பொழுதுபோக்கும் அளவுக்கு அவங்களுக்கு நேரம் கிடையாது என்பதுதான் உண்மை. அவ்வளவு பெரிய வீட்டைப் பார்க்கணும். முதல்வர் வீடு; எவ்வளவு பேர் தினம் வந்து போவார்கள். அவர்களை எல்லாம் கவனிக்கணும். எல்லாவற்றையும் நேர்த்தியாகச் செய்வாங்க. வீட்டை மிக அழகாக வைத்திருக்காங்க. சின்ன பூஜையறை தான். ஆனால் அவ்வளவு தெய்வீகமாக இருக்கும். இதையெல்லாம் பார்ப்பதற்கே அவங்களுக்கு நேரம் சரியாக இருக்கும். உதயநிதி நடித்த படங்களைப் பார்க்க ஸ்டாலினுடன் போவது மட்டும்தான் அவங்களுக்கு ஒரே பொழுதுபோக்காக இருக்க முடியும்.

**கேள்வி** - கலைஞர் மனைவி தயாளு அம்மாள் இப்போது எப்படி இருக்காங்க. அவரைப் பற்றி துர்கா ஸ்டாலின் எதுவும் சொன்னார்களா?

**பதில்** - தயாளு அம்மாள் வயதுக்கு எல்லோருக்கும் வரக்கூடிய பிரச்சினைகள் தான் அவங்களுக்கும் உள்ளது. மற்றபடி நன்றாக இருக்காங்க என்றுதான் சொன்னாங்க. தயாளு அம்மாளையும் எனக்கும் தெரியும். ராஜாத்தி அம்மாளையும் தெரியும். கலைஞரைப் பார்க்கப் போகும்போது பார்த்திருக்கேன். கலைஞர் மறைவுக்குப் பிறகு கோபாலபுரம் வீட்டுக்கு போகவே இல்லை. எனவே, தயாளு அம்மாளை பார்த்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. தயாளு அம்மா நிறைய பேச மாட்டாங்க, எப்பவும் அமைதியாக இருப்பாங்க. பெரும்பாலும் சமையல் கட்டுதான். கதவை லேசாகத் திறந்து எட்டிப் பார்ப்பாங்க. அவ்வளவுதான்.

**கேள்வி** - நீங்க, தமிழ்நாட்டின் இருபெரும் அரசியல் தலைவர்களான கலைஞரிடமும் நட்பாக இருந்திருக்கிறீர்கள், ஜெயலலிதாவுடனும் நட்பாக இருந்திருக்கிறீர்கள். தமிழ்நாட்டு அரசியலில் இருவரும் எதிரும் புதிருமானவர்கள். இந்நிலையில், இருவருடனும் ஒரே சமயத்தில் உங்களால் எப்படி நட்பாக இருக்க முடிந்தது?

**பதில்** - ஜெயலலிதாவுடனான நட்பு எங்கே இருந்து தொடங்கியது என்று எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மைசூர் யுனிவர்சிட்டியில் ஒரே சமயத்தில் கரஸ்பாண்டன்ஸில் ஜெயலலிதாவும் நானும் படித்தோம். அது ஞாபகம் உள்ளது. அவர் பொலிட்டிக்கல் சயின்ஸ் எடுத்திருந்தார், நான் சைக்காலஜி எடுத்திருந்தேன். ஆனால், இருவருமே முடிக்கவில்லை. அதற்கும் முன்னால் சென்றால் எம்.ஜி.ஆர். நடத்திய ‘தாய்’ பத்திரிகை காலகட்டம். அதற்கும் முன்னால் இருந்தே கூட எனக்கு ஜெயலலிதாவைத் தெரியும். அவங்க சோமன்பாபு உடன் இருந்த காலமும் தெரியும்.

அவங்க போயஸ் கார்டன் வீட்டுக்கு அனேகமாக தினமும் செல்வேன். ஆபிஸ் போகும்போது வீட்டில் இருந்து கிளம்பி ஜெயலலிதா வீட்டுக்கு போய் அவங்களை பார்த்துவிட்டு ஆபிஸ் போவேன். அது போல் ஆபிஸில் இருந்து வரும்போது அவங்க வீடு போய் அரை மணி நேரமாவது இருந்துவிட்டுதான் வருவேன்.

ஜெயலலிதா எனக்காக வாசலில் காத்திருப்பாங்க. அவ்வளவு அழகா இருப்பாங்க. பிங்க் புடவை கட்டியிருந்தால் அவங்க உடலெல்லாம் பிங்காக தெரியும், லைட் மஞ்சள் என்றால் அதேமாதிரி மஞ்சளாக ஜொலிப்பாங்க. நீண்ட கூந்தல். “வா இந்து” என ஆசையாக, சந்தோஷமாக வரவேற்பாங்க. அவங்க திராட்சைத் தோட்டத்தில் விளைந்த பழங்களைக் கொடுப்பாங்க. கொக்கோ கொடுப்பாங்க, புத்தகங்கள் அன்பளிப்பா கொடுப்பாங்க.

படித்த புத்தகங்கள், செய்த பயணங்கள், அரசியல் நிகழ்வுகள் என நிறைய பேசியிருக்கிறோம். உள்ளார்ந்த விடயம் எல்லாம் சொல்வாங்க. அவங்க கோபங்கள் தெரியும், வருத்தங்கள் தெரியும், சிரமங்கள் தெரியும்.

‘தாய்’ பத்திரிகை ஆசிரியராக வரும்படி என்னை எம்.ஜி.ஆர். அழைத்தார்.அரசியல்வாதிகள் நடத்தும் பத்திரிகை எப்படி இருக்கும் என்று எனக்குத் தெரியும்.

தொடர்ச்சி 09ஆம் பக்கம்

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
.Advanced function
.Calculus & vectors
.Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340 .9490 / 416.732.2228

## நாமும் நமது இல்லமும் 679

# சவாலான ஆதன வியாபாரம்



ராஜா மகேந்திரன்
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடியப் பொருளாதார நிலைமையினால் ஆதன வியாபாரம் சவாலாகக் காணப்படுகின்றது. ஆதன விற்பனையானது பொருளாதார மந்தநிலை, முதலீட்டாளர்களின் நம்பிக்கையற்ற நிலைமை, அதிக வட்டிவீத நிலை, வெளிநாட்டவர்கள் கொள்வனவு செய்ய முடியாமை போன்ற காரணங்களால் கடினமாகவும் இறுக்கமாகவும் உள்ளது.

கனடிய மத்திய அரசு 2025 ஜுன் மாதத்தின் ஆரம்பத்தில் முதல்தடவையாக ஆதனம் வாங்குவோரின் GST (Goods and Service Tax)இல் நிவாரணம் கொடுத்துள்ளது.

ஆதன வியாபாரத்தை ஊக்கப்படுத்த அரசு எடுக்க இருக்கும் பல ஊக்கங்களில் இது முதலாவதாகக் கருதப்படுகின்றது.

அண்மைய தரவுகளின்படி, ரொறொன்ரோவில் மட்டும் 24,000 ஆதனங்கள் விற்கப்படாமல் உள்ளன. (வன்கூவரில் 3,500 ஆதனங்கள் விற்கப்படாமல் உள்ளன)

அண்மைத் தேர்தல் பரப்புரையில் பிரதமர் மார்க் காணி, எதிர்வரும் பத்து வருடங்களிற்கு ஒவ்வொரு வருடமும் குறைந்தது 500,000 ஆதனங்கள் கட்ட உதவுவதாகக் கூறியிருந்தார். இதனைச் செய்வதற்கு ஏற்கனவே விற்கப்படாமல் இருக்கும் ஆதனங்களை விற்பதற்கு வழிகண்டு பிடிக்கப்பட வேண்டும்.

ஏற்கனவே கொண்டுவரப்பட்ட GST சலுகையானது முதல் தடவை ஆதனம் வாங்குவோரைத் தவிர ஏனைய வாங்குபவர்களிற்கும் நடைமுறைப்படுத்த வேண்டும் என ஆய்வாளர்கள் தெரியப்படுத்துகின்றனர்.

இப்பொழுது அதிகமான ஆதனங்கள் விற்கப்படாமல் இருந்தாலும், சனத்



தொகையின் தொடர்ச்சியான அதிகரிப்பும், வட்டிவீத இறக்கமும் எதிர்காலத்தில் குறைந்தது இரண்டு வருடங்களில் நிலைமை நிச்சயமாக மாறும் என எதிர்பார்க்கலாம். எனினும், சில அனுபவமிக்க நிர்மாண நிறுவனங்கள் சவால்களைச் சமாளிக்க ஆரபித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

உதாரணத்திற்கு வன்கூவரில் இருக்கும் 70 வருட நிர்மாண நிறுவனம் இந்த நிலைமையை முன் எடுத்துள்ளது. ஆறு அடுக்குமாடி மனைகளைக் கட்டத் தொடங்குகின்றது.

கடந்த வருடத்தின் (2024) இறுதியில் ஆதன வியாபாரம் முனைப்பு எடுத்த போதிலும் 2025இன் முதல் கால்பகுதியில் வியாபாரம் கடினமான சவால்களை எதிர்கொண்டது. இதனால் வியாபாரத்திலும், விலையிலும் எதிர்பாராத மாற்றம் காணப்பட்டது. ஆதன வியாபாரத்தை முன்னெடுப்பதற்கு நிர்மாண நிறுவனங்கள் பலவிதமான உத்திகளைக் கொண்டு வருகின்றன. உதாரணமாக குறைந்த வட்டி வீதத்தில் இரண்டு, மூன்று வருடங்களிற்கு அடமானக் கடனைக் கொடுத்து உதவுகின்றது.

அத்துடன் ஏற்கனவே விற்கப்பட்ட விலையைவிட மிகக்குறைவாக விற்பதனையும் காணலாம். அடுத்ததாக, அரசுகளினால் அறவிடப்படும் Development Fee இலும் பெரிய சலுகை காண்பிக்க வேண்டும் எனவும் நிர்மாண நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன.

1990இன் நடுப்பகுதியில் ஏற்பட்ட நிலைமையை இன்று (2020களின் நடுப்பகுதியில்) காணக்கூடியதாக உள்ளது. விற்பனைக்கும் சந்தைப்படுத்தப்படும் ஆதனங்களிற்கும் உரிய விகிதம் குறைவதனையே காணக்கூடியதாக உள்ளது. இதனால், விலையிலும் இறக்கம் ஏற்படலாம்.

குறிப்பாக இந்த வருடம் (2025) தொடக்கத்திலிருந்தே ஆதன வியாபாரம் மிகவும் மந்த நிலையை நோக்கியே செல்வதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

உதாரணமாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் (GTA) 2024 மே மாதத்துடன் 2025 மே மாதத்தை ஒப்பிடும்போது ஆதன வியாபாரம் 13.3%இனாலும், ஆதன விலை 4.5%இனாலும் இறக்கம் கண்டுள்ளது.

அதிக மக்கள் தொழிலை இழந்து வருவதனையும் காணலாம்.

## PREFAB HOUSING

தொழிற்சாலையில் வைத்து ஆதனங்களை உருவாக்கி அதனை இலகுவாக ஆதனம் இருக்க வேண்டிய இடத்திற்கு நகர்த்துவ தனை 'PREFAB' ஆதனங்கள் எனக் கொள்ளலாம். இம்முயற்சியில் 'Mattamy Home' நிறுவனம் முனைப்பு எடுத்துள்ளது.

கனடிய மூன்று அரசுகளும் இந்த முயற்சிக்கு ஆதரவு கொடுத்துள்ளன.

Mattamyஇன் அதிபரும் பில்லியனருமான பீற்றர் ஹில்கன் (Peter Gilgan) இதற்காக, ரொறொன்ரோவில் ஒரு தொழிற்சாலையை உருவாக்க இருப்பதாகத் தெரிய வருகின்றது. இவ்வாறான கட்டிடம் உருவாகிய பின்பு 3,000 அளவிலான வீடுகள் ஆண்டு ஒன்றிற்குக் கட்டி முடிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

இதன் முதல்படியாக 2026இல் திறக்க இருக்கும் தொழிற்சாலையில் ஆறு (6) அடுக்குமாடி மனை கட்டப்பட இருக்கின்றது. இதனால் மூன்று வருடங்களில் கட்டி முடிக்கப்பட இருக்கும் ஆதனங்கள் ஆறு (6) மாதத்திற்குள் கட்டி முடிக்கலாம் என இதன் தலைவர் தெரிவிக்கின்றார்.

திரு. பீற்றர் ஹில்கனின் பிள்ளைகளின் பெயரிலிருந்து Mattamy Home உருவானது. பிள்ளைகளின் பெயர் Matthew மற்றும் Amy.

இதேபோல் இவரின் மற்றைய மூன்று பிள்ளைகளின் பெயரிலிருந்து Prefab வீடுகளிற்கு பெயர் சூட்டியுள்ளார்.

பெயர்கள் முறையே Stephanie, Luke மற்றும் Markus.

Prefab வீடுகளின் பெயர் "STELUMAR". இந்தவிதமான ஆதனம் கட்டும் முறை தனக்கு முக்கியமானதாகத் தெரிவிக்கும் தலைவர், 1990களில் இவ்வாறான Prefab ஆதனம் கட்டத் தொடங்கி தோல்வி அடைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்றைய காலத்தில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றத்தால் இந்தத் திட்டம் (Project) நிச்சயம் வெற்றி பெற்று STELUMAR ஆதனங்கள் கனடியர்களின் ஆதனத் தேவையை பூர்த்தி செய்யும் எனவும் நம்பிக்கை தெரிவிக்கின்றார்.

விலையில் குறைந்தது 20% சேமிப்பும், நிர்மாணம் செய்து முடிக்கும் காலத்தில் 50% சேமிக்கலாம் எனவும் பெருமிதப்படுகிறார். இவரின் முயற்சிகள் வெற்றி பெற வாழ்த்துகள்.

## மக்களாணையும்...

6ஆம் பக்கத்தொடர்ச்சி

கூட்டமைப்பிற்கு முடிவு கட்டியது.

அது தமிழரசுக் கட்சிக்கு எதிரான பிரசாரமாக மாறியபோது, தாங்கள் அப்படி தனித்து போட்டியிட முடிவெடுக்கவில்லை என்றும், உள்ளூராட்சித் தேர்தலில் தனித் தனியாக போட்டியிடுவதன் மூலமே அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும், தேர்தலுக்குப் பின்னர் கூட்டாக இணைந்து ஆட்சி அமைக்கலாம் என்றே தாங்கள் கூறியதாகவும் சுமந்திரன் அப்போதும் வியாக்கியானம் கொடுத்திருந்தார்.

இம்முறை தேர்தல் முடிவுகள் வெளியான பின்னர் அவர், தான் அப்போது கூறியது சரி என்பதைத் தேர்தல் முடிவுகள் எடுத்துக்காட்டி இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் அவர் அப்போது குறிப்பிட்டது போல தனித்தனியாகப் போட்டியிட்டு இணைந்து ஆட்சி அமைப்போம் எனக் கூறியது, தமிழ் கட்சிகளை அல்ல என்பது இப்போது தெரிகிறது.

தமிழரசுக் கட்சி தனித்துப் பயணிக்கும் தீர்மானத்தை அன்றே எடுத்திருந்தது. அதற்கு பொய்யான ஒரு நியாயத்தைக் கூறி சமாளிக்க முற்பட்டது. ஆனால் இப்போது, அதுதான் உண்மை என்பது உறுதியாகி விட்டது.

உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி கூறுவதுபோல 17 சபைகளிலும் ஆட்சி அமைக்கக்கூடிய நிலை ஏற்படலாம்.

ஏனென்றால் தேசிய மக்கள் சக்தியும் ஈபிடிபியும் ஆதரவு வழங்கினால், அது சாத்தியப்படும். அது தமிழரசுக் கட்சிக்கு அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்கலாம்.




Vlambaram -June 15, 2025 .qxp_Vlambaram-Front 2025-06-14 6:01 PM Page 9



# நல்வாழ்வு பயிற்சி என்றால் என்ன? – பகுதி 5

உஷா மதிவாணன்
M. A (Social Work)
அலைபேசி: 647.808.2904

## Life Coaching

மற்றவர்களின் அபிப்பிராயங்கள் குறித்த சில பேரறிஞர்களின் கருத்துக்களை உங்கள் முன் வைத்து இந்த வார நல்வாழ்வுப் பயிற்சிக் கட்டுரையை ஆரம்பிக்க விரும்புகிறேன்.

“மற்றவர்களின் கருத்து என்பது அவர்களுடைய அறிவுக்கும், அறியாமைக்கும் மத்தியிலிருந்து எழுகிறது.”
- கிரேக்க தத்துவ மேதை பிளேட்டோ

“உலகத்தைப் பற்றிய மற்றவர்களுடைய எந்தக் கருத்தும் அவர்களது குணாதிசயத்தின் ஒப்புதல் வாக்குமூலம் என்பதை மக்கள் உணர்ந்ததாகத் தெரிய வில்லை.”
- ரால்ப் வால்டோ எமர்சன்
(அமெரிக்கத் தத்துவ மேதை)

எமர்சன்: “உங்களை வேறு ஏதாவது ஆக்க தொடர்ந்து முயற்சிக்கும் ஓர் உலகில் நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பதே ஒரு மிகப்பெரிய சாதனை” என்றும் தொடர்ந்து கூறுகிறார்.

இந்த மேற்கோள்களை எல்லாம் நான் ஏன் இங்கு உங்களுக்கு சொல்கிறேன் என்பது இத்தொடரை தொடர்ந்து வாசித்து வரும் உங்களுக்கு தற்போது விளங்கி இருக்கும்.

நாம் அனைவரும் மற்றவர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் கருத்துகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நமது வாழ்க்கையின் பாதைகளை மாற்றி அமைக்க முயல்கிறோம். இம்முயற்சிகள் எந்த அளவுக்கு வெற்றி அல்லது தோல்வி பெறும் என்பது நமக்கு முதலில் தெரியாது. நாம் செய்ய விளையும் அனைத்து காரியங்களுக்கும் ஓர் இலக்கு இருக்கிறது. அந்த லட்சியத்தை அடையவே நமது முயற்சிகளை நாம் ஆரம்பிக்கிறோம். அவை வெற்றி பெறுமா அல்லது தோல்வி அடையுமா என்பது பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அவற்றில் நமது பங்கு மிகச்சிறியதே. ஆனால் நமது அகங்காரத்தின் விளைவாக நான்தான், எனது அனைத்து காரியங்களுக்கும் காரணம் என்று நினைத்துக் கொள்கிறோம். முக்கியமாக நாம் செய்யும் காரியத்தில் வெற்றி வரும்போது நம்மால்தான் அனைத்தும் அடைந்தது என்று பெருமிதம் அடைகிறோம். ஆனால் தோல்வி என்று வந்து விட்டால் என்னைத் தவிர மற்ற காரணங்களும் மற்றவர்களும்தான் எனது தோல்விக்கு காரணம் என்று பிறரைச் சுட்டிக்காட்டுகிறோம்.

நல்வாழ்வு பயிற்சியாளர் மேற்கொண்ட அனைத்தையும் நன்கு புரிந்து கொண்டவராக இருப்பார். ஆகவே அவர் இந்த ஒரு ஞானத்தை பல்வேறு உதாரணங்களைக் காட்டி வாடிக்கையாளருக்கு புரிய வைக்க முனைகிறார்.

கிரேக்க அறிஞர் பிளேட்டோ கூறியபடி மற்றவர்களின் அபிப்பிராயம் என்பது அவர்களது அறிவுக்கும் அறியாமைக்கும் மத்தியில் இருந்து எழுகிறது என்பதை விளக்குகிறார். வாடிக்கையாளரின் பிள்ளைகளும், நண்பர்களும் எதனால் அவர் இசையை ஒரு முக்கியமான பொழுது போக்காக எடுத்துக்கொண்டு முன் செல்வதற்கு தடையாகத் தங்களது அபிப்பிராயங்களைக் கூறினர் என்பதற்கான காரணங்களை குறித்து கேள்வி எழுப்புகிறார்.

வாடிக்கையாளரின் இந்தப் பிரச்சினை குறித்த அவர்களது எண்ணம் அல்லது அறிவு என்பது, அவர்களது குணாதிசயங்களின் எதிரொலியாகவே இருக்கக் கூடும். வாடிக்கையாளரின் பிரச்சினை குறித்து அவர்களுக்கு இருக்கும் அறிவைவிட அறியாமையே மேலதிகமாக இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம். அதுகுறித்து அவர்களது பரபரப்பான வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு இடையே அவர்களால் ஆழ்ந்து சிந்தித்து பதில் கூற முடிந்ததா என்பது தெரியவில்லை. முதலில் வாடிக்கையாளர் எதனால் இம்முயற்சியில் இறங்குகிறார் என்பதை அவர்களுக்கு விளக்கிக் கூறினாரா;. அவர்கள் அதை முழுமையாக விளங்கிக்கொண்டபின் அவரது முயற்சியை தடுக்க முனைந்தார்களா போன்ற பல வினாக்களை பயிற்சியாளர் வாடிக்கையாளரின் முன் வைத்தார்.

பயிற்சியாளர் பிறகு வாடிக்கையாளரிடம் தனக்கு வாழ்க்கையில் மீண்டும் சுவாரசியத்தை உருவாக்க, தற்போதைய சலிப்பை எதிர்கொள்ள இசை என்பது ஒரு மிகப்பெரிய திறப்பு என்பதை முழுமையாக நம்புகிறாரா என்ற மிக முக்கியமான கேள்வி எழுப்பினார். வாடிக்கையாளர் உத்வேகத்துடன் ஆம் நானும் எனது துணைவியரும் மீண்டும் பாடுவதற்கும், எமது கிட்டார் பயிற்சியைத் துவக்குவதற்கும் மிகுந்த ஆர்வத்துடன் தான் இருந்தோம். ஆனால் மற்றவர்களின் அபிப்பிராயத்தை கேட்டதுதான் எமது தவறு என்று மிகவும் சுலபமாக தனது முடிவை இங்கு கூறினார்.

மிகவும் சுலபமாக என்று நான் மிகவும் எளிதாகக் கூறிவிட்டேன். நாம் எந்த முடிவையும் மிகவும் சுலபமாக எடுத்து விடுவதில்லை. அது குறித்து நமது மனதில் வெவ்வேறு கோணங்களில் இருந்து சிந்தித்துப் பார்த்துக்கொண்டுதான் இருந்திருப்போம். பயிற்சியாளரும் இதை நன்கு அறிந்திருந்ததனால் அவரது முடிவு குறித்து உரையாடலைத் தொடர்ந்தார்.

மற்றவர்களின் அபிப்பிராயத்தை கேட்டது உங்கள் தவறு என்று உணர்ந்த பின் நீங்கள் என்ன முடிவுக்கு வந்தீர்கள், அந்த முடிவின் அடிப்படையில் என்ன முயற்சி செய்ய ஆரம்பித்தீர்கள் என்று பயிற்சியின் அடுத்த கட்டத்துக்கு வாடிக்கையாளரை நகர்த்தினார்.

வாடிக்கையாளர் தான் எடுத்த முடிவில் உறுதியாக நிற்கிறாரா அல்லது இன்னும் மன ஊசலாட்டத்திலே தான் இருக்கிறாரா என்பதற்கு இப்பொழுது பதில் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு உள்ளாகிறார். பயிற்சியாளர் மிகவும் தன்மையாக முதல் அடியை எடுப்பதுதான் இலக்கை அடைவதற்கு முதல்படி என்பதை திரும்பவும் எடுத்துரைக்கிறார். மேலும் முயற்சியை எடுக்க விடாமல் வாடிக்கையாளரை தடுப்பது எது என்பது குறித்து அவரை யோசிக்க தூண்டுகிறார்.

தற்போது வாடிக்கையாளர் தனது இசை பயிற்சியை மீண்டும் துவங்குவதற்கு தயாராகவே இருப்பதால் தன்னைத் தடுப்பது எது என்ற கேள்வியை எதிர்கொள்ள தயாராகவே இருக்கிறார். பயிற்சியாளர் உடன் இதற்குள் அவருக்கும் ஒரு சகஜ மனப்பான்மை வந்து விட்டதால் சிரித்துக் கொண்டே “என்னை தடுப்பது எனது சோம்பேறித்தனம்தான்” என்பதை ஒத்துக் கொள்கிறார். மற்றவர்களின் அபிப்பிராயம் என்பதற்குப் பின் நான் ஒளிந்து கொள்கிறேன் போல என்றும் தனது மனநிலையை பரிசீலிக்க முன் வருகிறார். இது பயிற்சியாளருக்கு ஒரு வெற்றியாகும். வாடிக்கையாளர்கள் தனது மனநிலையை நடு நிலைமையுடன் பரிசீலிக்க முன் வருவதுதான் நல்வாழ்வு பயிற்சியின் மிகப்பெரிய முன்னேற்றபடியாகும்.

மீண்டும் சந்திப்போம் நண்பர்களே!




## எம்.ஜி.ஆர். முதல்...

7ஆம் பக்கத்தொடர்ச்சி

எனவே, அதற்கு நான் தகுதியான ஆள் கிடையாதுங்க என்று மறுத்து விட்டேன். பிறகு அந்தப் பத்திரிகை வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வெளியிடும்படி சொன்னார். மறுத்துவிட்டேன். சரி, இன்னொருவர் வெளியிடுவார் நீங்க வாங்கிக்கங்க என்றார். அதற்கும் மறுத்து விட்டேன். அதன்பிறகு, ஜெயலலிதா சொன்னதால், அந்த வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு பேசினேன்.

அதன்பிறகு ஜெயலலிதாவுக்கும் எனக்கும் ஒரு பத்திரிகை தொடங்குகிறேன் என்றார் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா வெளியீட்டாளர், நான் ஆசிரியர். இடம் பார்த்து, மிஷின் எல்லாம் வந்து இறங்கிவிட்டது. அதற்குள் ஒரு மாற்றம் நிகழ்ந்து, ‘காவேரி தந்த கலைச்செல்வி’ நடன நாடகக் குழுவை ஜெயலலிதா தொடங்கினாங்க. அதன்பிறகு அரசியலுக்கு சென்றுவிட்டார்.

கேள்வி - அதன்பிற்கும் அவருடன் நட்பு தொடர்ந்ததா?

பதில் - நட்பு தொடர்ந்தது. ஆனால், நேர் சந்திப்புகள் இல்லை, தொலைப்பேசி வழியாக மட்டுமே இருந்தது. இவங்க (சசிகலா) வந்தபின்னர் நாங்க ஒவ்வொருவராக போவதை நிறுத்திக் கொண்டோம்.

கேள்வி - அதே காலகட்டத்தில் கலைஞருடனும் உங்களுக்கு நல்ல நட்பு இருந்தது. அது தொடர்பாக ஜெயலலிதா என்ன சொன்னார்?

Vlambaram -June 15, 2025 .qxp_Vlambaram-Front  2025-06-14  6:01 PM  Page 10



# நானிலம் போற்றும் நட்பு - 68



– அகணி –
authorakani@gmail.com

இப்பொழுது இன்னா நாற்பதின் இருபத்து ஆறாம் செய்யுளிற்குச் செல்வோம்.

“பெரியாரோ டியாத்த தொடர்விடுத லின்னா
அரியவை செய்து மெனவுரைத்த லின்னா
பரியார்க்குத் தாமுற்ற கூற்றின்னா வின்னா
பெரியோர்க்குத் தீய செயல்.”

இந்தச் செய்யுளின் முதலடியில் “பெரியாரோடு யாத்த தொடர் விடுதல் இன்னா” என்பது பெரியவர்களுடன் கொண்ட நட்பினை விடுதல் துன்பத்திற்குரியது என்பதைச் சொல்லுகின்றது. பெரியவர்கள் என்கின்ற பொழுது வயதில் மூத்தோர்களையும் குறிக்கலாம் அல்லது கல்வியில், செல்வத்தில், வீரத்தில் எங்களைவிட உயர்ந்தவர் களையும் குறிக்கலாம். புலவர் இவற்றில் ஏதோ ஒன்றை அல்லது எல்லாவற்றையும் சேர்த்து ஏதோ ஒரு வகையில் எங்களைவிட உயர்ந்தவர்களுடன் கொண்ட நட்பை விடுதல் துன்பத்திற்குரியது என்ற கருத்தோடும் இந்தச் செய்யுளின் முதலடியை அமைத்திருக்கலாம். எவ்வாறு இருப்பினும் இந்தக் காலத்திற்கும் ஏற்றதாக எவ்வகையிலோ பெரியவர் ஒருவருடன் நட்பை விடுதல் துன்பத்திற்குரியது என்று எடுத்துக் கொள்வதே பொருத்தமானதாகும். சில நேரங்களில் பெரியவர்களுடன் கொண்ட நட்பை விடுதலால் ஏற்படும் இடைஞ்சல்களையும், துன்பத்தையும் பார்க்கும் பொழுது பெரிய இடத்து நட்பே இனிமேல் வேண்டாம் என்றும் எண்ண வைத்து விடும்.

சிலர் உறுதி மொழிகளை எந்தவிதமான தயக்கமும் இன்றி வழங்கிவிடுவர். செய்ய முடியாத விடயங்களைச் செய்வோம் என உறுதியளித்துவிட்டுப் பின்பு திண்டாடுவர். “எங்களுக்கு இல்லை என்று சொல்லமுடியாததால் செய்வோம் எனக் கூறிவிட்டோம், இப்பொழுது இந்தக் காரியத்தைச் செய்ய முடியவில்லையே” என்று வருந்தும் நிலையும் ஏற்படுவதுண்டு. பல அரசியல் வாதிகள் செய்ய முடியாத விடயங்களைச் செய்வோம் என்று கூறிக்கொள்வார்கள். இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொண்டதாக இந்தச் செய்யுளின் இரண்டாம் அடியில் “அரியவை செய்தும்! என உரைத்தல் இன்னா” என வருகின்றது.

இப்பொழுது குறுந்தொகையில்வரும் நூற்றிதொண்ணூற்றிஏழாவது பாடலைக் கவனிப்போம்.

இது, கச்சிப்பேட்டு நன்னாகையார் என்னும் புலவர் பாடிய செய்யுள். கார் காலத்தில் தலைவனைப் பிரிந்திருந்த தலைவி தனது தோழியிடம் உரைத்தது. இது நெய்தல் திணை சார்ந்தது.

குளிர்காலம் வந்து விட்டது. வாடைக்காற்று சில்சில் லென்று வீசுகின்றது. அதனோடு மழையும் பெய்து கொண்டிருக்கின்றது. அந்த மழையையும் குளிரையும் தாங்க முடியாமல் மக்கள் அனைவரும் இல்லத்திலே மறைந்து கொண்டிருக்கின்றனர்.

இந்தப் பருவத்தில் காதலனைப் பிரிந்த காரிகை ஒருத்தி கலங்கியிருக்கின்றாள். குளிரை யும், மழையையும் தாங்க முடியாமல் தவிக்கின்றாள். இச்சமயத்தில் நமது துயரைத் தணிக்கும் காதலன் இல்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றாள்.

அவள் கவலையைக் கண்ட தோழி “தலைவன் வந்து விடுவான் கார்ப்பருவம் வந்ததை அவரும் பார்ப்பார். இதனால் பிரிந்தவர் வருந்துவார் என்பதும் அவருக்குத் தெரியும். ஆதலால் நீ வருந்த வேண்டாம், பொறுத்திரு” என்றாள்.

தலைவி “நான் என்ன செய்வேன்! நானும் எவ்வளவோ பொறுத்துத்தான் பார்க்கின்றேன். என்னால் துன்பம் தாங்க முடியவில்லை. மிகவும் மெலிகின்றேன். என்னுடைய மெலிவைக் கண்டு இக்கூதையும், மழையும், இடியும் என்னைப் பயமுறுத்துகின்றன. என்னுடைய உடலையும், உயிரையும் பிரிக்கும் கூற்றுவனைப்போல் வந்து அச்சுறுத்துகின்றன. இந்த அச்சத்திலிருந்து நான் எப்படித் தப்ப முடியும் என்று தெரிய வில்லை, என்றாள். இந்த நிகழ்ச்சியை உரைப்பதுதான் இச்செய்யுள்.

“யாது செய்வாம் கொல் தோழி! நோதக,
நீர் எதிர் கருவிய கார் எதிர்கிளை மழை,
ஊதையம் குளிரொடு பேதுற்று மயங்கிய,
கூதிர் உருவின் கூற்றம்,
காதலர் பிரிந்த என் குறித்து வருமே?”

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம். “தோழியே நான் என்னதான் செய்வேன்! தலைவன் வருவார் என்று சொல்லுகின்றாய். ஆனால் அவர் இன்னும் வரவில்லை.
நீர் நிரம்பிய மேகம், கரிய மேகம், மின்னல் மின்னும் மேகம், இடியிடிக்கும் மேகம், மழையைப் பொழிகின்ற மேகம், வாடைக் காற்றோடு சேர்ந்து கொண்டது. இப்படிக் கூதிரோடு கலந்து ஒன்றுபட்ட மேகம் உண்மையில் மேகம் அன்று. கூதிர் காலமும் அன்று. இது குளிர்காலம் என்னும் உருவத்திலே வந்திருக்கும் கூற்றமேயாகும். காதலரைப் பிரிந்து, உள்ளமும், உடலும், மெலிந்து வருந்தும். என்னை துன்புறுத்தவே இந்தக் கூற்றுவன் வந்திருக்கின்றான். ஆதலால் நான் இப்பொழுது துன்புறாமல், அஞ்சாமல் எப்படியிருப்பேன்?” என்றாள் தலைவி. இதுவே இச்செய்யுளில் அமைந்திருக்கும் பொருள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் நூற்றிதொண்ணூற்றிஒன்பதாவது பாடலைக் கவனிப்போம்.

இது, பரணர் என்னும் புலவர் பாடிய செய்யுள். தலைவியைப் பெற்றோர் வீட்டுக்குள் அடைத்து வைத்து விட்டனர், என்று தோழி உரைத்ததைக் கேட்ட தலைவன் தன் மனத்திற்குச் சொல்லியது. இது குறிஞ்சித்திணை சார்ந்தது.

